# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 11,654 — 1959 ජනවාරි 28 වැනි බදාදා — 28.1.1959

11,654 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு தை மாதம் 28 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இல. சீ. 283. ஆட்டிறைச்சி.

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் விலைக் கட்டுப்பாட்டதிகாரிக்கு (உணவு), அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு கொட்டுவே முகாந்திரம் தர்மசேன ஜயனெத்தி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), ஆகிய யான் இக்கட்டளையால்.—

(1) 1958 ம் ஆண்டு மே மாதம் 31 ந் திகதியைக் கொண்ட 11,332 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட சீ. 270 ம் இலக்க உணவு விலைக் கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்து விடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே ஒரு இருத்தலுக்குரிய ஆகக்கூடிய விலையாக உடனடியாகவே நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் நேரொத்த பதிவில் விவரிக்கப்பட்ட இந்த விலைகளுக்குக் கூடுதலாக, அட்டவணையின் தலைப்பில் குறிக்கப்பட்டிருக்கும் இடங்களுக்குள் விற்றலாகாது ;

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக.—

(அ) " ஆட்டிறைச்சி " என்றால் செம்மறி ஆட்டின் அல்லது வெள்ளாட்டின் மாமிசத்தைக் குறிப்பதாகும், எல்லாவிதமான கழிவுகளும் தவிர்ந்ததுமாகும்.

(ஆ) விற்பனைக்குத் தயாராக ஆடடிக்கும் தொட்டியிலிருந்து செம்மறி ஆட்டின் அல்லது வெள்ளாட்டின் சடலம் (தலை, தோல், குடல், குளம்புகள், மற்றும் எல்லாவிதமான வழமையாகக் கழிக்கப்படுபவைகள் தவிர்ந்த) மற்றவை விற்பனை செய்யப்பட்டால் அது " உயிரற்ற நிறையாக " கருதப்படும் என்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) ஆட்டிறைச்சி எலும்புடன் விற்கப்படுமிடத்து, எலும்புகளின் நிறை மொத்தமாக விற்கப்படும் நிறையின் 25 சத வீதத்துக்கு மேற்படல் ஆகாது என்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(5) இக்கட்டளையினால் ஆகக்கூடிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடத்திலும், அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வர்ணனையும் தரத்தையும் கொண்ட ஆட்டிறைச்சியைத் தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது பாத்திரத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அவ்வாகனத்தில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வர்ணனையையும் தரத்தையும் கொண்ட ஆட்டிறைச்சிக்கு இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டும் என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(6) ஆட்டிறைச்சியுடன் கழிவுகளும் விற்கப்படின், ஆட்டிறைச்சி கழிவுகளில் இருந்து வேறாக நிறுத்து விற்கப்படல் வேண்டும் என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(7) ஒவ்வொரு வியாபாரியும் ஆட்டிறைச்சி விற்கும் பொழுது தன்னுடைய நிறுக்கும் தராசையோ, தராசுகளையோ ஆட்டிறைச்சி வாங்குபவர் தாம் வாங்கும் ஆட்டிறைச்சியின் உண்மையான நிறையைப் பார்க்கக் கூடிய இடத்தில் வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(8) அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வர்ணனையையும் தரத்தையும் கொண்ட ஆட்டிறைச்சியை விற்கும் ஒவ்வொரு வியாபாரியும், ஆட்டிறைச்சியை வாங்குவோர் கேட்குமிடத்து, அன்னாருக்குப் பின்வருபனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டும் என்று ஆஞ்ஞையிடுகிறேன் ;

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்கப்பட்ட ஆட்டிறைச்சியின அளவும் (நிறையில்) ;

(இ) விற்பனை செய்யப்பட்ட ஆட்டிறைச்சியின் வர்ணனையும் ;

(ஈ) விற்கப்பட்ட ஆட்டிறைச்சியின் அளவுக்குக் கொடுக்கப்பட்ட விலை.

(9) இக்கட்டளையினால் ஆகக்கூடிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடத்திலும், அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பொருளை வேறு எந்த இறைச்சியுடனும், மாமிசத்துடனும் கலந்து விற்றல் ஆகாது என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(10) குறித்த அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள பொருள் விற்குமிடத்து அட்டவணையின் 2 ம் , 3 ம், 4 ம் பத்திகளில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில், அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(11) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " இருத்தல் " அல்லது " இரு " என்பது " அவோர்டுபோஸ் " எடுத்தல் அளவை முறையின் பிரமாண இருத்தல் முறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன்.

1959 ம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ந் திகதி மு. ப. 9 மணிக்கு கொழும்பில் கையொப்பம் இடப்பட்டது.

கே. எம். டீ. ஜயனெத்தி,
விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு).

## அட்டவணை

### ஆட்டிறைச்சியின் ஆகக்கூடிய விலை

| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 | பத்தி 4 |
|---|---|---|---|
| இடம் | ஆட்டிறைச்சி (எலும்பு இல்லாமல்) ஒரு இருத்தலுக்கான ஆகக் கூடிய விலை | ஆட்டிறைச்சி (எலும்புடன்) ஒரு இருத்தலுக்கான ஆகக் கூடிய விலை | (உயிரற்ற நிறை) ஆட்டிறைச்சி ஒரு இருத்தலுக்கான ஆகக் கூடிய விலை |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| கொழும்பு நகரசபை எல்லைக்குள் | 2 25 | 1 95 | 1 70 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருள்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல. இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருள்களை விற்றலாகாது.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.